மதிப்புள்ள வேலைகள் துவங்கப்பட்டன. தற்போது இத்திருக் கோயிலில் போதிய நிதி வசதியின்மையால் வேலை பாதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளும் முடிக்கப் பட்டவுடன் குடமுழுக்கு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள்.

55—(*வினா எண் 12864) திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மொத்த உற்பத்தி எவ்வளவு?

(இ) அவற்றிலிருந்து மாநிலத்திற்கு கிடைக்கும் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே,

(அ) மூன்று.

(ஆ) 1280 மெகாவாட்.

(இ) 996.5 மெகாவாட்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் இரண்டாம் அனல் மின் நிலையத்தினுடைய முதல் பிரிவின் முழு உற்பத்தியையும் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கே கோரியது குறித்து மத்திய அரசின் பதில் என்ன? அவற்றை உறுதியாக கோரி பெறுவதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நெய்வேலியில் உள்ள ஒன்றாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப் படும் மின்சாரம் 100 சதவிகிதம் இந்த மாநிலத்திற்கே வழங்கப் படுகிறது. இரண்டாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தில் சுமார் 28 சதவிகிதம்தான் மத்திய அரசு வகுத்த இலக்கணப்படி தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, மைய மின் நிலையங்களிலிருந்து 28 சதவிகிதம் மாநிலத்திற்கு வழங்குவது என்பதை 50 சதவிகிதம் ஆக வழங்க வேண்டும் என்ற ஒரு

1987 நவம்பர் 11]

கோரிக்கையை மாநில அரசு முன் வைத்திருக்கிறதா அல்லது முன் வைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் அல்ல, 100 சதவிகிதமும் தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை போக்குவதற்காக கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசு இசைவு தரவில்லை.

கோயில்களில் பரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை.

56—(*வினா எண் 13734) **திருமதி டி. யசோதா :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்களில் பரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை ஒழிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர் முறையை நீக்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி டி. யசோதா: பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுடைய அதிகப்படியான நிலங்களும் அதனுடைய வருவாயும் நல்ல காரியங்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் போய் சேருவதற்கு இந்த பரம்பரை தர்மகர்த்தா முறை தடையாக இருப்பதால் அதிலே அரசாங்கம் மிக வேகமாக நடவடிக்கை எடுத்து இதனை முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இது விஷயமாக அவசரப்பட்டு மிக முக்கியமான ஒரு மசோதாவை கூட நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. இன்னும் மைய அரசுதான் குடியரசுத் தலைவர் மூலமாக இசைவு அளிக்கவில்லை. இசைவு அளித்தால் தம்பிரான் என்ற பெயரால் அறங்காவலர்களாக இருந்துக் கொண்டு பல ஆயிரக்கணக்கான நிலங்களும் மற்றும் உள்ள சொத்துக்களும் இருக்கும்போது அவர்களுடைய வாரிசுகள் யார் என்று கூட தெரியாமல் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். நிலம் இருந்தும் அவர்களால் அந்தப் பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. குறிப்பாக நாம் போகிறபோது கோயில்களின் விளக்கு எரியவில்லை என்று சொன்னால், பொதுமக்களுக்கு அது யாருடைய கோயில் என்று தெரியாமல்—பொதுவாக கோயில்